# சார்க்மாநாட்டில்பிரதமர்சந்திரசேகர் தடுமாற்றம்


விலை ரூபா 4-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கார்த்திகை 7 ஜ: அவ்வல் பிறை: 5 இதழ்: 212

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23-11-1990


## அறிக்கையில் குழம்பினார்

(மாலே)

'சார்க்' உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் உரையாற்றும்போது பெரும் தடுமாற்றத்திற்குள்ளானதால் அங்கத்தவர்கள் அடிக்கடி கரகோஷம் செய்தனர்;

இதுபற்றி தெரியவருவதாவது: 'சார்க்' மாநாட்டில் வாசிப்பதற்காக தாம் தயாரித்துவந்த அறிக்கையை வாசிக்கும் போது திரு. சந்திரசேகர் பல பந்திகளை மாறி மாறி வாசித்தார். இதனால் அறிக்கையின் கருத்து குழம்பிப்போனது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச ஒலிபரப்புகள் மாவீரர்க்கு முக்கியத்துவம்

(லண்டன்)

தமிழீழ போராட்டத்தில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் போராளிகளின் மாவீரர் வாரத்திற்கு சர்வதேச ஒலிபரப்புகள் முக்கியத்துவமளித்து செய்திகளை ஒலிபரப்பிவருகின்றன.

இதுதொடர்பாக பி.பி.ஸி. வெரிதாஸ் றேடியோ, ஒஸ்ரேலியா, வொய்ஸ் ஒவ் அமெரிக்கா, பீபா வானொலி உட்பட பல ஒலிபரப்புகள் கடந்த இரு தினங்களாக செய்திகளை ஒலிபரப்பியுள்ளன.

(4ம் பக்கம் பார்க்க)

# ● தெற்கே தமிழருக்கு எதிராக— கலவரம் ஏற்படுத்த முயன்ற பல முஸ்லிம் மதவாதிகள் கைது

## படையினர் உஷார் நிலையில்

(கொழும்பு)

**வடக்கு-கிழக்குக்கு வெளியே தமிழருக்கு எதிராக கலவரம் ஒன்றை ஏற்படுத்த முயன்ற முஸ்லிம் மதவாதிகள் பலர் கொழும்பில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். படையினரும் உஷார்படுத்தப்பட்டுள்ளனராம்.**

வடக்கு-கிழக்கில் எழுந்துள்ள நிலைமையை அடுத்து கலவரத்திற்கான முயற்சிகள் பல்வேறிடங்களில்மேற்கொள்ளப்பட்டதாகவும் எனினும் இதுபற்றி புலனாய்வுத் துறைக்கு கிடைத்த தகவல்களை அடுத்து முஸ்லிம் மதவாதிகள் சுமார் 40 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனராம்.

தென்பகுதியில் முஸ்லிம்கள் பெருமளவிலுள்ள பகுதிகளிலும் பொலிஸார் பலத்த கண்காணிப்பில் ஈடுபட்டுமுள்ளனர். இதற்கென பொலிசாரின் புதிய தகவல் மையங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (சி)

## இலங்கை நிலைமை குறித்து பிலிப்பைன்ஸில் மாநாடு

(மணிலா)

ஸ்ரீலங்காவில் தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கையால் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவது குறித்து பிலிப்பைன்ஸ் தலைநகரில் கடந்த 17-ம் திகதி மாநாடொன்று நடைபெற்றுள்ளது.

மணிலாவிலுள்ள 'மனித உரிமைகள் அமைப்பும்', கத்தோலிக்க திருச்சபையும் இணைந்து இம்மாநாட்டை நடாத்தியுள்ளன. இம்மாநாட்டில் பல முக்கிய அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் அலங்கார ஊர்தி கிராமம்தோறும் பவனி

(வட்டுக்கோட்டை)

மாவீரர் வாரத்தையொட்டி நேற்று அதிகாலை 1மணியளவில் அலங்கார ஊர்தி ஒன்று பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலடியில் இருந்து புறப்பட்டு மூளாய், வட்டு. மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டைச்சந்தி, அராலி. துணைவி. சித்தன்கேணி. சுழிபுரம் ஆகிய இடங்களுடாக ஊர்வலமாக மூளாயை வந்தடைந்தது.

மாவீரர்தின நிகழ்ச்சிகளில் ஓர் அங்கமான இவ்வழகிய

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ பலம் ஒரு லட்சமாகும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவத்தின் வலு 1992 ல் ஒருலட்சமாகுமென பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் விடுதலைப் புலிகள் இராணுவத்தின்மீது உக்கிர தாக்குதலை தொடர்ந்தும் நடாத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். தேவையேற்படும் பட்சத்தில் ஓர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட படைகள் தயாராயுள்ளதாகவும் கூறினார்.

தற்போது இராணுவத்தின் எண்ணிக்கை சுமார் 60,000 ஆக இருப்பதாக பாதுகாப்பு வட்டாரக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது. (சி)

## தொடர்ச்சியாக 3வது நாள் உக்கிர வான் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பகுதியிலும் நேற்று 3-வது நாளாக சீ-பிளேன், ஹெலிகொப்டர்கள் பரவலாகத் தாக்குதல்களை நடத்தின.

சாவகச்சேரிப்பகுதியில் நேற்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ உதவி நிராகரிப்பு; கேர்ணல் கடாபி அறிவிப்பு

(திரிப்பொலி)

ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு உதவுமாறு லிபியாவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அதிபர் கேர்ணல் கடாபி நிராகரித்து விட்டதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்யும் நோக்கில் அண்மையில் 9 பேரடங்கிய குழுவொன்று லிபியா சென்றதும் இராணுவத்திற்கு உதவுவதாக அதிபர் கடாபி கூறியதும் தெரிந்ததே.

எனினும் தற்போது இந்த உதவி வழங்கப்படாதென கடாபி கூறியுள்ளதாக நேற்றிரவு ஏஜென்ஸி செய்தியொன்று தெரிவித்துள்ளது. (சி)

## சீபிளேன் ஷெல் தாக்குதல்

(வடமராட்சி)

உடுப்பிட்டி, கரவெட்டி இமையாணன் பகுதியை சுற்றி சீ-பிளேன் 'சேச்லைற்' அடித்தபடி மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஷெல் தாக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவன் கணக்கில் புலி

[லண்டன்]

பிரிட்டனில் கல்வியியல் புலத்தில் நம்பிக்கை நட்சத்திரமாக ஒளிவிடுபவர் கணேஷ் சிற்றம்பலம் என்ற தமிழீழ மாணவன்தான். மூன்றுவயதில் கணக்கில் 'புலி' யென பெயர்பெற்ற இவன் பன்னிரண்டு வயதில் பிறைற்றன் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் பட்டப் பரீட்சையில் முதல்தர

(4-ம் பக்கம் பார்க்க)

## திலீபன் நூலகம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நினைவாக லெப். கேர்ணல் திலீபன் நூலகம் நேற்றுப் பிற்பகல் யாழ்.

(4-ம் பக்கம் பார்க்க)

## மாலைதீவில் சிறைப்பட்ட 68 'புளொட்' உறுப்பினரும் கொழும்பு வர ஏற்பாடு

(கொழும்பு)

மாலைதீவு சதிப்புரட்சியில் ஈடுபட்டுசிறைப்படுத்தப்பட்ட 68 'புளொட்' உறுப்பினர்களையும் கொழும்புக்கு கூட்டிவர ஸ்ரீலங்கா அரசு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கான உடன்பாடொன்றையும் இரு நாடுகளும் மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

மன்னர்

# இராணுவ முகாம்களில் முஸ்லிம்களுக்கு பயிற்சி

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்திலுள்ள ஸ்ரீலங்கா படை முகாம்கள் பலவற்றிலும் முஸ்லிம் ஊர் காவல் படையினருக்குத்துரித இராணுவப் பயிற்சி வழங்கப் பட்டு வருகின்றது.

மன்னார்மாவட்டத்தில் சிலாவத்துறை, தலைமன்னார், தள்ளாடி முகாம்களில் இவர்களுக்குத் தற்போது பயிற்சியளிக்கப்பட்டு வருவதாக மாகாண சபைகள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான பயிற்சிகள் அடுத்த சில வாரங்களில் முடிவடைந்ததும் உடனடியாக மன்னார் மாவட்டத்தில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். (சி)

# பனம்பொருள் பாவனை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பனை மரத்திலிருந்து பெறப்படும் உணவு வகைகளுக்குத் தற்போது அதிக மவுசு ஏற்பட்டுள்ளது. தென்மராட்சிப் பகுதியில் பனம் உணவுகளைப் பொதுமக்கள் பெரிதும்விரும்பி உண்டு வருகின்றனர்.

சாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக் கிராம மக்கள் கம்பனி புழுக்கொடியல் மா, ஒடியல் மாவு ஆகியவற்றைப் பயன்படுத்தித் தோசை, வடை, லட்டு, பற்றிஸ், பனங்காய்ப் பணியாரம் போன்றவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்து வருகின்றது.

இந்நிறுவனம் முன்னர் ஏற்றுமதித் தரத்திலான பனந்தும்பு உற்பத்தியை மேற்கொண்டுவந்தது குறிப்பிடத் தக்கது. (54)

# தொண்டர் ஆசிரியர் விபரம் சேகரிப்பு

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர், கட்டண ஆசிரியர், ஆசிரியைகளாகக் கடமையாற்றுவோரது இரகசிய அறிக்கைகளை அனுப்பிவைக்குமாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவை குழு அதிபர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில்தெரிவு செய்யப்பட்ட தொண்டர் ஆசிரியர்களது பெயர்களையும் அவர்கள் பற்றிய இரகசிய அறிக்கை சமர்ப்பிக்கும் படிவத்தையும் மேற்படி கல்விச் சேவைக்குழு தெரிவு செய்யப் பட்ட ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் ஆசிரிய நியமனம் பெறவுள்ள இந்தத் தொண்டர் ஆசிரியர்களிடம் விண்ணப்பங்கள் முன்னர் கோரப்பட்டு ஒவ்வொருவரதும் சேவை மூப்புதகைமை திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர்களே தற்போது அதிபர்களுக்கு அனுப்பப்பட்டு இரகசிய அறிக்கையும் கோரப்பட்டுள்ளது.

பெரும்பாலும் நீண்ட காலமாகத் தொடர்ச்சியாக தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றி வருபவர்களது பெயர்களே தற்போது அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடக்கிறது. (139)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் கிருஷ்ணபிள்ளை சுந்தரம்பிள்ளை

மண்ணுலகு: 14-4-1910 விண்ணுலகு: 4-12-1989

திதி: 23 - 11 - 1990

குடும்பத்தின் ஒளிவிளக்காய், வழிகாட்டியாய், தருமநெறி காப்பவராய், திகழ்ந்து பூவுலகைவிட்டு விண்ணுலகு அடைந்த ஓராண்டு சென்றாலும் அவர் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செட்டிகுறிச்சி,
சுழிபுரம் வடக்கு,
சுழிபுரம்.

(எ- 878)

# யாழ். நகரில் தேசிய கொடியேற்று வைபவம்

(யாழ்ப்பாணம்)

"தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் வலுவடைந்து விட்டது. இதை இனி எந்த சக்தியாலோ அல்லது எந்த வல்லரசுகளாலோ நசுக்கிவிடமுடியாது. எமது தமிழீழ விடுதலைக்காக தமது விலைமதிக்க முடியாத உயிர்களை துச்சமாக மதித்து உயிர்தியாகங்கள் செய்த இந்த மாவீரர்களை நாம் இன்று கௌரவிக்கின்றோம்."

இவ்வாறு விடுதலைப்புலிகள் சுண்டுக்குழிபிரதேசப்பொறுப்பாளர் திரு. பகீன் கொழும்புத்துறை மகாவித்தியாலயத்துக்கு முன்பாக நடைபெற்ற மாவீரர் கொடியேற்ற வைபவத்தில் கூறினார்.

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய ஆதரவில் அரியாலை சிற்றூரவை தலைவர் திரு. பாலசுந்தரம் தலைமையில் மேற்படி வைபவம் நடைபெற்றது. வீரமரணமடைந்த காப்டன் காந்தியின் தந்தை பொன்னுச்சாமி கனகரட்ணம் மாவீரர் கொடியை ஏற்றி வைத்தார்.

### ஈச்சமோட்டை

ஈச்சமோட்டை சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற கொடியேற்ற வைபவம் பாஷையூர்சிற்றூரவைத் தலைவர் திரு. சச்சிதானந்தசிவம் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறையில் இந்திய இராணுவத்துடன் நேரடி மோதலில் வீரமரணமடைந்த மேயர் டயஸ் கந்தசாமியின் மனைவி திருமதி புனிதவதி மாவீரர் கொடியை ஏற்றி வைத்தார்.

### பாஷையூர்

பாஷையூர் பகுதியில் நடைபெற்ற கொடியேற்ற வைபவம், பாஷையூர் சிற்றூரவை செயலாளர் திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில நடைபெற்றது. அப்பகுதியில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளின் பெற்றோர்கள் மாவீரர் தேசியக் கொடிகளை ஏற்றிவைத்தனர். மூன்று நிலையங்களில் கொடியேற்று வைபவங்கள் தனித்தனியாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

### கந்தர்மடம்

கந்தர்மடம் சனசமூகநிலையத் தலைவர் செ. து. கெட்சணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் திரு சி. நவரட்ணம் மாவீரர் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். இவ்வைபவத்தில் வீரமரணமடைந்த வேங்கைகளின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

நேற்று மாலை சகல இடங்களிலும் வீரமரணமடைந்த மாவீரர்களின் புகைப்படங்களும் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டன.

### மடம் வீதி

யாழ்ப்பாணம் மடம் வீதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சனசமூகநிலைய முன்றலில் போஷகர் க. சி. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் வீரமரணமடைந்த வீரவேங்கை சீலனின் உறவினர் ஒருவர் மாவீரர் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

### கொய்யாத்தோட்டம்

கொய்யாத் தோட்டம், பாண்டியன்தாழ்வு சனசமூக நிலைய முன்றலில் பாஷையூர் சிற்றூரவைத் தலைவர் திரு. சச்சிதானந்தசிவம தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் வீரவேங்கை மேஜர் டயஸ் கந்தசாமியின மற்றொரு சகோதரரான திரு ம. சுந்தலிங்கம் மாவீரர் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

### சுண்டுக்குளி

சுண்டுக்குழி சனசமூக நிலையத் தலைவர் திரு. இராசதுரை தலைமையில் நிலைய முன்றலில் நடைபெற்ற வைபவத்தில், வீரமணமடைந்த முன்னாள் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளரும், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளருமான மேஜர் டயஸ் கந்தசாமியின் சகோதரர் திரு. ம. சிவசுப்பிரமணியம், மாவீரர் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். (வி)

## ராசி பலன்

23-11-1990

வெள்ளிக்கிழமை

ஷஷ்டி பி. இ. 1-09 வரை, உததராடம்மூ. ப. 7.27வரை, ராகுகாலம் 10-41 முதல் 12-11 வரை, சித்தயோகம், ஷஷ்ட்டி விரதம், நல்லநேரம் 6-11 முதல் 7 41 வரை;

மேடம்- செல்வந்தர் நட்பு, குடும்ப மகிழ்ச்சி, தொழில் சிறப்பு, இனசன வருகை.

இடபம்- போட்டி மனப்பான்மை, தாயன்பு, குடும்பப் பிரிவு, செய்தொழில் நஷ்டம்.

மிதுனம்- காரியதடை, அந்நியர் தொல்லை, பணக் கஷ்டம், அலைச்சல் மிகுதி.

கடகம்: அடிமை நிலை, அகால போஜனம், எண்ணங்கள் கைகூடாமை. மனைவியால் செலவு.

சிங்கம்- காரியவெற்றி, சுப காரியம், நன்மதிப்பு, பயணங்களால் அனுகூலம்.

கன்னி- கடித உறவு, பொதுப்பணி, அறிஞர் சந்திப்பு, காரியவெற்றி, புகழ்.

துலாம்- மனக்கவலை, நோய் வாட்டும், வஸ்திராபரணச் சிறப்பு. புதிய தொழில் முயற்சி.

விருச்சிகம்- கல்வியால் மேன்மை, தூரத்து உறவு, திருமணப்பேச்சுக்கள், நண்பர்கள் வருகை.

தனுசு- ஏமாற்றப்படுதல், விரக்தியுறுதல், தொழில் நஷ்டம், குடும்பசச்சரவு.

மகரம்- புதியஸ்தானம், தாய் வழி உதவி, குடும்ப மகிழ்ச்சி, எதிர்பாராத உதவி, மனநிறைவு.

கும்பம்- அந்நியர் சகாயம், தொழில் பிணக்கு குடும்பத்தில் குழறல், பணக்கஷ்டம்.

மீனம்- பழைய நினைவுகள், மாமனார் தொல்லை. குடும்பத்தில் பிணக்கு, தொழில் லாபம்.

ஜோஸ்யர்.

டெஸ்ட் கிரிக்கெட்:

# இலங்கையும் - இந்தியாவும் இன்று மோதுகின்றன

(கொழும்பு)

இலங்கைக்கும் - இந்தியாவுக்குமிடையில் இன்று வெள்ளிக்கிழமை முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்போட்டி இந்தியாவின் சண்டிகாரில்ஆரம்பமாகின்றது.

மேற்படி இருகோஷ்டிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள மூன்று ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் அடுத்த மாதம் 1-ம், 5-ம், 7-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இலங்கைக் கோஷ்டிக்கு அருச்சுன றணதுங்காவும், இந்தியக் கோஷ்டிக்கு முஹமட் அஸாறுதீனும் தலைமை தாங்குகின்றனர்.

### சார்ஜா கிரிக்கெட்

சார்ஜாவில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் போட்டிகளில் இம்முறை இலங்கையும், பாகிஸ்தானும் மட்டுமே கலந்து கொள்ளுகின்றன. மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் நெருக்கடியால் மற்றைய நாடுகளின் கிரிக்கெட் கோஷ்டிகள் இம்முறை கலந்து கொள்ள முன்வராதது குறிப்பிடத்தக்கது.

சார்ஜாவில் மேற்படி இரு கோஷ்டிகளும் அடுத்தமாதம் 20-ம், 21-ம் திகதிகளில் இரு போட்டிகளில் கலந்து கொள்ளும்.

### ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி

மேற்படி போட்டிகள் முடிவடைந்ததும் 'ஆசிய கிண்ண' போட்டி அடுத்த மாதம் 25ம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகை தினத்தன்று டில்லியில் ஆரம்பமாகும்.

ஆசிய கிண்ணத்தை கடந்த வருடம் பாகிஸ்தான் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (வி)

## புகைப்பட கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் 'ஈழத்தமிழர்போராட்ட வரலாறு' என்னும் புகைப்படக் கண்காட்சி யாழ் பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

## நீரில் மூழ்கி மரணம்

(அச்சுவேலி)

குளிக்கச்சென்ற சிறுவன் கிணற்றுள் தவறிவிழுந்து நீரில் மூழ்கி மரணமானார்.

பத்தமேனியைச் சேர்ந்த தணிகாசலம் தவதர்சன் (வயது 12) என்ற சிறுவனே மரணமானவராவர்.

## நோர்வே நன்கொடை

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், மத்திய கிழக்கில் நிர்க்கதியாய் இருக்கும் மக்களைத் தாயகம் கொண்டுவரவும் நோர்வே இருபத்துமூன்று கோடி இருபது லட்சரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்நன்கொடைஇரண்டு கட்டமாக வழங்கப்பட்டுள்ளது. (ச)

விமான விபத்து:

## 34 பயணிகள் பலி!

(பாங்கொக்)

தாய்லாந்து எயர்வேய்ஸ் விமானமொன்று விபத்துக்குள்ளானதால் அதில் பயணம் செய்த முப்பத்திநாலு பேரும் கொல்லப்பட்டுள்ளனர். கடும் புயல் மழைகாரணமாக விமானம் தரையிறங்க முற்பட்ட போது விமானம் விபத்துக்குள்ளாகியது. (ச)

## இன்று ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 65வது பிறந்த தினக் கொண்டாட்டம் இன்று வெள்ளிக்கிழமை பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தி மண்டபத்தில் [சேர் பொன் இராமநாதன் வீதி திருநெல்வேலி தெற்கு] நடைபெற்றது.

இவ் விழாவில் காலை 5-00 நகரசங்கீர்த்தனம், காலை 8-30 கொடியேற்றம், 8-45 பாத பூசை, இலட்ச அருச்சனை உட்பட பல நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## மாவீரர்களே! மானவீரர்களே!!

தமிழீழ மக்களின்
விடுதலைக்காக
நல்ல
எதிர்காலத்திற்காக
உங்கள் நல்ல
எதிர்காலத்தை
எதிர்பார்ப்புகள்
எதுவுமேயின்றிப்
புதிராக்கிய
புனிதர்களே!
இறப்பை
இமைப்பொழுதில்
கொண்டு தரும்
நஞ்சுமாலையைக்
கழுத்தில் களிப்புடன்
கட்டிக்கொண்டு-
வேங்கையின் வீரத்துடன்
களங்களிற் போராடி
மண்ணைவிட்டு-
எங்கள்
கண்ணைவிட்டு-
மறைந்திட்ட
எங்கள்
மாவீரர்களே!
இல்லை! இல்லை!!
தமிழ் மக்களின்
உள்ளங்களில்
நிறைந்துவிட்டவர்களே!
உணர்வுகளில்
கலந்துவிட்டவர்களே!!
''தமிழீழம்'' எனும்
இலட்சியம் நோக்கி
முன்னே நடந்தீர்கள்!
உங்களின்
இலட்சியப் பாதையில்
இலட்சம் இலட்சமாகத்
தொடர்வோர்க்கு
ஏன்-தடம்புரண்டு
இடறுவோர்க்கும்கூட
ஒளிகாட்டும்
குன்று ஒளிவிளக்காக-
தமிழீழமாம்
இதயதாகத்தின்
ஆமாம்-
இதயராகத்தின்
வெற்றிப்பாதைக்கான
வழிகாட்டும்
குன்றின் மணிவிளக்காக-
சுடர்பரப்பும்
பெறற்கரிய
பெரும்பேற்றைப்
பெற்றுவிட்டீர்களே!

'குன்றுதோருடி'

# ஆயுதப் போராட்ட ஆரம்ப கட்டத்தில் புலிகள் 'சயனைட்'டைப் பயன்படுத்தினர்

[3]

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கட்டத்தில் விடுதலைப்புலிகள் சயனைட்டைப் பயன்படுத்தத்தொடங்கியபோது பல வாதப்பிரதிவாதங்களை ஈழவிடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்ட பல்வேறு குழுக்கள் முன்வைத்தன. விடுதலைப் புலிகள் இயக்கத்தைத்தவிர ஏனைய இயக்கங்களெல்லாம் ஒரு போராளியானவன் எதிரியிடம் சிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் சயனைட் போடக்கூடாதென்ற கருத்தையே கொண்டிருந்தன. 1984 - 85 காலகட்டத்தில் ஒரு இயக்கம் போராளிகளே நீங்கள் மக்களின் சொத்து- சயனைட் போட உங்களுக்கு உரிமையில்லையெனக்குறிப்பிட்டு பெரிய சுவரொட்டிகளை ஒட்டியது. இன்னொரு இயக்கத்தின் லண்டன் பிரமுகர் ஒருவர் சயனைட் வில்லைகளை போராளிகள்பயன்படுத்துவது பற்றி முரண்பாடான கருத்தை கொழும்பிலிருந்து வெளியாகும் ஒரு ஆங்கிலப் பத்திரிகைக்குத் தெரிவித்தார். ஆனால் தியாகி சிவகுமாரனை ஆத்மார்த்தமாக நேசிக்கும்போராளிகள் அவன் வழியை ஏற்றுக்கொண்டனர். விடுதலைப்புலிகள் சயனைட்டை தமது கவசமாக மட்டுமல்லாமல் எதிரிக்கு எதிரான ஒரு ஆயுதமாகவும் பயன்படுத்தி இருக்கிறார்கள். உதாரணமாக 5-10-87 அன்றுபலாலி ராணுவ முகாமில் சயனைட் அருந்தி மரணமான 12 வேங்கைகள் தம்மிடம் ஆயுதமில்லாத நிலையிலும் கூட தம்மைத்தாக்க வந்த சிங்களச் சிப்பாய்களை சயனைட் போட்டபின் கடித்ததையால் கோப்ரல் அமரசிங்கா, சிப்பாய் செனிவிரத்ன ஆகிய இருவரும் கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கே இறந்தார்கள்.

விடுதலைப்புலிகள் சிலவேளைகளில் எதிரியினால் சுற்றிவளைக்கப்படும்போது ஒரு சயனைட்டை ஒன்றுக்கு மேற்பட்ட போராளிகள் அருந்தி வீரமரணமடைந்திருக்கிறார்கள்.

கிழக்குமாகாணத்தில்1987ம் ஆண்டு சிறிலங்கா அதிரடிப்படையிரால் சுற்றிவளைக்கப்பட்டநிலையில் லெப். உமாராமும் அன்ரனும் ஒரே சயனைற்றைப் பகிர்ந்து அருந்திவீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்கள். இது இலங்கைத் தமிழர்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஒருபுதிய பரிமாணத்தை வெளிப்படுத்தியது. தேசத்தின் விடுதலைக்காக ராணுவ ரகசியங்களைக் காப்பாற்றும் முகமாக இயக்கத்தின் மரபுகளைக் கட்டிக்காப்பதற்காக இரண்டுபோராளிகள் நஞ்சை பகிர்ந்து கொண்டமை பல

**விநாயகபுரத்தில் சுற்றிவளைப்பின்போது ரமணி, நிதி என்ற இரு போராளிகள் ஒரு சயனைட்டைப் பகிர்ந்து கடித்த பின், தமது அடி வயிற்றில் குண்டுகளை வைத்தபடி படுத்துவிட்டனர். அவர்களது உடலை புரட்டிப் பார்த்தபோது குண்டுவெடித்து இரு இந்தியப் படையினர் பலியானார்கள்.**

ரது நெஞ்சையும் நெகிழவைத்தது ஒருமுறை தளபதி கிட்டுவிடம் ஒருவெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒரு கேள்வியைக் கேட்டார். அதற்குப் பதிலளித்த தளபதி கிட்டு எமது கழுத்தில் சயனைட் இருக்கும்வரை நாம் யாருக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை எனக்குறிப்பிட்டார்.

எமது தமிழர் சமுதாயம் நீண்ட நெடுங்காலமாகவே தமக்கு ஆயுள்பலம் வேண்டி ஆலயங்களில் பிரார்த்தனை செய்வதும் கையிலும் கழுத்திலும் தாயத்தும் அட்சரக்கூடும் கட்டிக் கொள்வதை பாரம்பரிய வழக்கமாகக் கொண்டிருக்கின்றது. ஆனால் விடுதலைப்புலிகள் அகால மரணத்தை எதிர்கொண்டே சயனைட்டைக் கழுத்தில் கட்டினார்கள்.


இலங்கை ராணுவத்தின் முற்றுகைகளின் போதும். இந்திய ராணுவத்தின் தேடுதல் நடவடிக்கைகளின் போதும் அவர்களுடன் மோதிப் பலர் காயப்பட்ட நிலையில் சயனைட் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு தொகையான போராளிகள் சயனைட் அருந்தி நாட்டு விடுதலைக்காக வீரமரணத்தைத் தழுவிக் கொண்டது ஒரு பெருமைக்குரிய வரலாற்றை இலங்கைத்தமிழர் போராட்ட வரலாற்றில்தான் காணலாம். அந்த வரலாற்றுப் பெருமை முழுக்க முழுக்க விடுதலைப் புலிகளுக்கே உரியதாகும்.



மேஜர் சலாம்

தியாகி சிவகுமாரன் சயனைட் அருந்தி வீரமரணமடைந்த பின்னர் அவனைப் போல விசுவாசமான பல போராளிகள் போராட்டத்தில் சேர்ந்து கொண்டனர். இவர்களும் சிவகுமாரனைப் போல சயனைட் வில்லைகளை தம்மைக் காக்கும் ஒரு கேடயமாகப் பயன்படுத்தலாயினர். 1984ம் ஆண்டு மேமாதம் 18ம் திகதி விடுதலைப் புலிகள் போராளி பகிரதன் (செல்வம்- மண்டைதீவு) சயனைட் அருந்தி வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள்இயக்க முதல்போராளியாவான். இதையடுத்து ராணுவ சுற்றிவளைப்பின் போது ராணுவத்துடன்மோதி காயப்பட்ட நிலையில் பல போராளிகள் பல தடவைகள் சயனைட் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

1988-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் திகதி வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்ற மாகாண சபைத் தேர்தலைப் பகிஸ்கரிக்கும்படி பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காரைநகரைச் சேர்ந்த சக்கரை (த. துரைராசா) அதே இடத்தைச் சேர்ந்த கோபி (ஆறுமுகம் தவபாலன்) ஆகிய இரு போராளிகளும் இந்திய இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் தண்ணீர் எடுக்க வந்த பொது மக்களைக் காப்பாற்று முகமாக மோதலைத் தவிர்த்து தம்மிடம் இருந்த ஒரேயொரு சைனைட்டை இருவரும் அருந்தி மரணத்தைத் தழுவிக்கொண்டனர்.



சக்கரை

### மணிமாறன்

இதேபோல அம்பாறை மாவட்டத்தில் 19-3-89 அன்று விநாயகபுரத்தில் சுற்றிவளைப்பு ஒன்றின்போது ஏற்பட்ட மோதலின் பின் ரமணி, நிதி என்ற இரண்டு போராளிகள் ஒரு சைனைட்டை பகிர்ந்து கடித்த பின் கையில் இருந்த கைக்குண்டுகள் இரண்டை தமது அடிவயிற்றில் கழற்றி வைத்துவிட்டுபடுத்துக்கொண்டனர். இறந்த அவர்களது உடலைப் புரட்டிப் பார்க்க வந்த இந்தியப் படையினர் நால்வரில் இருவர் கிரனேட் வெடித்து இறந்தனர். மற்ற இருவரும் காயமடைந்தனர்.

களத்தில் காயப்பட்ட நிலையில் எதிரிகளிடம் துப்பாக்கிகளுக்கூடாக அவர்களுக்குப் புரிந்த ராணுவமொழியில் பதிலளித்துக்கொண்டிருந்த சக போராளிகளுக்கு தான் சுமையாகிவிடக் கூடாதென்பதற்காக லெப். பரமதேவா, வீரவேங்கை ரவி ஆகிய இரு போராளிகளும் 22-9-84 அன்று இடம்பெற்ற களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது சயனைட் அருந்தி வீரமரணத்தைத்தழுவிக்கொண்டனர். அதேபோல முல்லைத்தீவிலுள்ள கள்ளிக்காட்டில் இந்திய ராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது 14-3-88 அன்று கப்டன் வாதவூரன் (த. யோகேஸ்வரன்) சக போராளிகளுக்குத் தான் இடையூறாக இருக்கக் கூடாதென்பதற்காக சக போராளிகளைப் பார்த்து பின்வருமாறு சொன்னான்.

''என்னைக்காப்பாற்றநினைக்காதீர்கள். போராட்டத்தைக் காப்பாற்றுங்கள். மண்ணைக் காப்பாற்றுங்கள். எதிரியை நோக்கிச் சுடுங்கள்'' என்று கூறிவிட்டு சயனைட் போட்டு மரணத்தைத் தழுவிக்கொண்டான். குண்டடிபட்டு குருதி வழிந்தோட குற்றுயிராகக் கிடந்த நிலையிலும் இப்படியாகப் பல விடுதலைப்புலிகள் பல தியாக வரலாற்றைப்படைத்திருக்கிறார்கள். வல்வெட்டித்துறையில் சுற்றி வளைப்பின் போது மேஜர். சலாம், மன்னாரின் வெள்ளாங்குளத்தில் மேஜர் நரேன் போன்ற பல எண்ணற்ற தியாக வேங்கைகள் படைத்த வீரவரலாறு தனித்துவமானது. 1987 ஆகஸ்ட் மாதம் தலைவர் வே. பிரபாகரன் அவர்களிடம் சயனைட் பற்றி ஒரு பத்திரிகையாளர் கேட்டபோது அவர் பின்வருமாறு சொன்னார். ''நான் தான் முதலில் சயனைட் கட்டினேன். அதன் பின்னரே மற்றவர்களைக் கட்டச் சொன்னேன். எதிரிகளிடமிருந்து எம்மைக் காப்பாற்றிக்கொள்ளவும், எம்மோடு கூட இருந்து வீரமரணமடைந்த எண்ணற்ற நண்பர்களின் ஞாபகார்த்தமாகவும் நாங்கள் இதனை எங்கள் கழுத்தில் அணிந்து கொள்கிறோம்'' என்றார்.

## நோயாளிகளுக்கு உதவிப் பணம்

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த புற்றுநோய், தொழுநோய், காசநோய் ஆகியவற்றினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அண்மையில் உதவிப் பணம் வழங்கப்பட்டது.

அரசாங்கத்தினால் மாதம் தோறும் வழங்கப்படும் உதவிப் பணம் வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து.வைத்திலிங்கத்தின் முயற்சியினால் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து அண்மையில் ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய உதவிப் பணமாக வழங்கப்பட்டுள்ளது.

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரீட்சை

(மாங்குளம்)

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பின்போடப்பட்ட பரீட்சை எப்போது நடைபெறுமென விண்ணப்பதாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

வடபகுதியில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை யூன் 15ஆம் திகதி நடைபெற இருந்த போதிலும் பின்போடப்பட்டது.

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்த உத்தியோகத்தர்கள் அடுத்த பரீட்சை எப்போது நடக்குமென எதிர்பார்க்கின்றனர். இவர்கள் பதவி உயர்வுக்காகவே இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ ஆய்வு நிறுவனம் கண்காட்சி இன்று ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு இன்று தொடங்கும் இம்மாதம் 25-ம் திகதிவரை வலிகாமம், வடமராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளில் மாவீரர் நாள் பொருட்காட்சிகளை நடத்த தமிழீழ ஆய்வு நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேற்படி கண்காட்சியின் நோக்கங்கள் பற்றி தமிழீழ ஆய்வுநிறுவனம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: தமிழீழத்தின் பொருளாதாரத்துக்கு உதவக்கூடிய மூலவளங்களையும், கிடைக்கக்கூடியமூலப்பொருட்களையும், அவற்றின் தற்போதைய பயன்பாட்டளவுகளையும் எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளையும் மக்கள் அறியச் செய்தல்.

தமிழீழத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் கடற்றொழில், கைத்தொழில், விவசாய நடவடிக்கைகளையும் அவற்றின் உற்பத்திகளையும் அதிகரிக்க உள்ளூர் உற்பத்திகளை மக்கள் கொள்வனவு செய்யத் தூண்டுதல்.

தமிழீழ மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார எரிபொருள் பிரச்சனைகளை வெளிக்காட்டி இப்பிரச்சனைகளை எதிர்கொள்ள தமிழீழ ஆய்வு நிறுவனம் எடுத்துள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மக்களுக்கு காட்சிப் படுத்தல், தமிழீழத்தில் பொருளாதாரத்தில சுயநம்பிக்கையை வளர்த்தெடுத்தலும், அதற்காக யாவரும் உழைக்க வேண்டும் எனும் உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தலும் ஆகும். (153)

## அரவம் தீண்டிய இருபெண்கள் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி தச்சன் தோப்பைச் சேர்ந்த கே. அழகம்மா யாழ். கொய்யாத் தோட்டம் சசிகலாதேவி (வயது 28) ஆகிய இருவரும் அரவம் தீண்டி யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (153)

# அரசு நிறுவனங்கள் மறுப்பு பொது ஸ்தாபனங்கள் உதவி

## -மாணவர் ஒன்றியம் அறிக்கை-

(யாழ்ப்பாணம்)

"அரச நிறுவனங்கள் நிவாரண உதவி வழங்க பல்கலைக்கழக வெளிமாவட்ட மாணவர்களுக்கு பின் நின்ற அந்த வேளையிலே அரச சார் பற்ற நிறுவனங்கள் சிரத்தையுடன் எங்களுக்கு மனமுவந்து உதவி வழங்கின"

இவ்வாறு வெளிமாவட்ட யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் சார்பில் மட்டு - அம்பாறை மாவட்ட மாணவர்கள் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் அரசசார் பற்ற நிறுவனங்களுக்கு நன்றியினை தெரிவித்துள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: இம் மாதம் 18ந் திகதி மட்டுநகர், அம்பாறை மாவட்டங்களிலிருந்து 34 மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகம் வந்து விடுதியில் தங்கியுள்ளனர். மேற்படி மாணவர்கள் அகதிகள் முகாம்களிலும், பாதுகாப்பான காட்டுப்பகுதில் இருந்துமே இங்கு சமூகமளித்துள்ளனர். இந்த நிலையினால் இவர்கள் மிகுந்த பொருளாதாரச் சிக்கலை எதிர்நோக்குகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இவர்களுக்கும், அரசசார் பற்ற பொது ஸ்தபானங்களின் உதவி அவசியமாகின்றது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் கிழக்கு மாகாண மாணவர்களுக்கு நிவாரண உதவிகளைத் தொடர்ந்து வழங்க ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றூர்கள். (153)

# பிரிட்டிஷ் பிரதமர் தட்சர் ராஜினமா!

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் ராஜினமா செய்துள்ளார். ஆளும் கன்சர்வேர்டிக் கட்சியின் புதிய தலைவரை தெரிவு செய்ததும் அவர் பதவி விலகுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமை பதவிக்கான முதல்கட்ட வாக்கெடுப்பில் வெற்றிபெருதையடுத்து திருமதி தட்சர் பதவியை நேற்று திடீரென ராஜினமா செய்தார். இரும்பு மனிதரின் பதினெரு வருடகால ஆட்சி அஸ்தமித்து விட்டதாக அவதானிகள் கூறியுள்ளனர்.

பாராளுமன்றத்தைகலைத்து உடனடியாக தேர்தலைநடத்துமாறு எதிர்க்கட்சியான 'தொழில் கட்சி' கோரிக்கை விடுத்துள்ளதும் குறிப்பிடத் தக்கது. [சி]

## நிலைமைபற்றி அறிந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் வந்துள்ள உலக திருச்சபை உறுப்பினர்கள் நேற்றுக்காலை யாழ். ஆயர், யாழ். அரச அதிபர் ஆகியோரைச் சந்தித்து இங்குள்ள நிலைமைபற்றி அறிந்துகொண்டார்கள். (153)

# சிமெந்து ஆலையுள் நுழைந்த புலிகள்

(சென்னை)

தமிழகத்திலுள்ள பிரபல சிமெந்து ஆலை ஒன்றுக்குள் இரு சிறுத்தைப் புலிகள் உட்புகுந்ததையடுத்து ஆலை ஊழியர்கள் பயத்தினுல் வெளியேறிவிட்டார்கள்.

அவ்விரு சிறுத்தைகளையும் பிடிப்பதற்காக வனபரிபாலன அதிகாரிகள் ஆலைக்குள் விரைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

சிறுத்தைகள் புகுந்ததை அடுத்து சிமெந்து ஆலையின் வேலைகள் ஸ்தம்பிதமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. (க)

## இலங்கைநிலைமைபற்றி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் மனிதவுரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் மாநாட்டில் வன்மையாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்துடன் வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற மோதல்களில் காயமடைந்த அறிஞன் (ராஜேஸ்வரன் ஜெயராஜ் திருமலை) ஞானம் ஆகியோர் நேற்று வீரமரணமடைந்தனர். (வி)

## பொருட்கள் இறக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'குமண' கப்பலிலிருந்து நேற்று முதல் மீண்டும் பொருட்கள் இறக்கும் வேலைகள் துரிதகெதியில் நடைபெறுகின்றது.

பருத்தித்துறை துறைமுகத்திற்கு அருகிலே மேற்படி இறக்கும் உணவுப்பொருட்கள் களஞ்சியப்படுத்தப்படுகின்றன. (153)

### சார்க் மாநாட்டில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் இந்த அறிக்கையை வாசிக்கும் போது பெரும் தடுமாற்றமடைந்ததுடன் இடைக்கிடை குழப்பத்திற்கும் உள்ளாஞர். இதன்போது மாநாட்டு மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் பலதடவை கரகோஷம் செய்தனராம். (ச)

### தமிழீழ

(1-ம பக்கத் தொடர்ச்சி)

மாணவஞக சித்தியடைந்து அறஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

இவனது தந்தை அர்ச்சுஞ சிற்றம்பலமும்தாயார்திருமதி சிற்றம்பலமும் கணித மேதைகள் தான். இவனது கல்லூரி வாழ்வில் 8 வயதில் 16 வயது மாணவர்களைப் போலவும், 9 வயதில் 18 வயது மாணவர்களைப் போலவும் கணக்கில் சிறந்து விளங்கிஞன்.

பிரிட்டிஷ் கல்வியற்கூடங்களில் பிரிட்டிஷ் மாணவி ரூட் லோறன்ஸ் 15 வயதில் பல்கலைக் கழகபட்டத்தைப் பெற்ற சாதனையை முறியடித்து கணேஷ சாதனை படைத்துள்ளார். (ச)

## வரிவிளம்பரம்

### O/L விஞவிடை

திறமைச்சித்திபெற உதவும் 1989 பரீட்சையின் ஆறுபாட விஞவிடை ரூபா 37/50. 1988 பரீட்சையின் ஆறுபாட விஞவிடை ரூபா 32/50. புத்தகசாலைகளில் கிடைக்கும். (எ-884)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Number B/100306/81.

### மாவீரர் அலங்கார

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஊர்தியில் வட்டுக்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த வீரமரணமடைந்த 59 போராளிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

கலைவண்ணம் நிறைந்த இவ் வழகிய ஊர்தி புறப்பட்டுள்ளது என்ற செய்தியைக் கேள்வியுற்ற பொதுமக்கள் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது தங்கள் தங்கள் பகுதி வீதிகளில் பெருந்தொகையாகக் கூடி நின்றனர். போராளிகளின் உருவப்படங்களுக்கு மலர்கள் தூவி பக்திச்சிரத்தையோடு வணக்கமும் தெரிவித்தனர்.

இந்த ஊர்தியின் ஊர்வலப் பவனி தினமும் தொடர்ந்து வெவ்வேறு கிராமங்களுக்கும் செல்லவிருப்பது குறிப்பிடத் தக்கது. (139)

### தொடர்ச்சியாக

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றுக்காலை சீ-பிளன் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டது. இந்தச் சீ-பிளேனின் கலிபர் தாக்குதலினுல் ஏ. தேவபாலன் (வயது 18) என்ற வாலிபன்காயமடைந்து யாழ்.போதனு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமாஞர்.

நேற்று நண்பகல் கல்வியங்காடு சந்தைப் பகுதியில் நடைபெற்ற ஹெலித் தாக்குதல்களினுல் ஐந்து பேர் காயமடைந்துள்ளார்கள்.

கல்வியங்காடு எஸ். பிரபாகரன் (வயது 25), நல்லூர் சங்கிலியன் வீதி ரீஎம். இராமநாதன் (வயது 66), யாழ். நகர்எஸ்.தேவநாயகம்(வயது-19), கல்வியங்காடு கே. செல்லத்துரை (வயது 55), கல்வியங்காடு நாகம்மா (வயது-50) ஆகியோர் ஹெலித் தாக்குலிஞல் காயமடைந்தவர்களாவர்.

புத்தூர் பகுதியில் நடைபெற்ற ஹெலித் தாக்குதல்களிஞல் எஸ். சசிகுமார் (வயது 12) என்ற சிறுவன் காயமடைந்துள்ளார்.

பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களிஞல் புத்தூர் ரி. செல்வராணி (வயது 38) என்பவர் காயமடைந்துள்ளார்.

தெல்லிப்பழை, கொக்குவில், நல்லூர், கோப்பாய், நவக்கிரி, புன்ஞலைக்கட்டுவன், இருபாலை. குருநகர், வட்டுக்கோட்டை: பண்டத்தரிப்பு, கொழும்புத்துறை பாஷையூர் உட்பட பல பகுதிகளிலும் ஹெலித் தாக்குதல்கள் பரவலாக இடம்பெற்றன. (153)

## உதவிப்பணம் கொடுப்பனவு மாற்றம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் புலமைப்பரிசில் பெறுவதற்கு பெற்ருேரின் வருடவருமானம் இருபத்தெட்டாயிரத்துக்குக் குறைய இருக்க வேண்டுமென்ற வரையறையை பல்கலைக்கழகழக மானிய ஆணைக்குழு முப்பத்தாறுயிரம் ரூபாய்என மாற்றம் செய்துள்ளது.

இப்புதிய திட்டம் மூலம் பல மாணவர்கள் உதவிப் பணம் பெறும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (ச)

### மாலைதீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'புளொட்' அமைப்பிற்கு மிடையில் நல்லுறவு நிலவுவதையடுத்தே இந்த ஏற்பாடென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### சீபிளேன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை மேற்கொண்டது.

பலவீடுகள், உடமைகள் சேதமடைந்தன. உடுப்பிட்டியில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு 9-30 மணிமுதல் 10-15 மணி வரை உடுப்பிட்டி, நாவலர் மடம், குழங்கரை, எள்ளங்குளம், இமையாணன், நவுண்டில் பகுதியில் சீ- பிளேன் தாக்குதலை மேற்கொண்டது.

இச்சம்பவத்தில் உடுப்பிட்டி இமையாணன் வாசியான திருநாவுக்கரசு தெய்வலிங்கம் (வயது 30) என்னும் வாலிபன் படுகாயத்திற்குள்ளான நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (51)

### திலீபன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மணிக்கூட்டுவீதி (கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனம்) முன்பாக திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி நூலகம் லெப். கேர்ணல் ராதாவின் தந்தை திரு. கனகசபாபதி, மில்க்வைற் அதிபர் திரு: கனகராசா ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா மேற்படி நூலகத்திற்கு பல நூல்களை அன்பளிப்பு செய்தார். (153)

# வயோதிப மாது வெட்டிக்கொலை

(வடமராட்சி)

வதிரிச்சந்திக்கு அண்மையில் வயோதியமாது ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார். சந்தேகத்தின் பேரில் உறவினர் இருவர் விடுதலை புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் குடியிருப்பில் கசிப்புக் குதம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வதிரி போரிக்கைவளவு என்னும் இடத்தில் புதன் கிழமை இரவு 9-30 மணியளவில் நித்திரைப்பாயில் இருந்த திருமதி இரத்தினம் சிவபாக்கியம் என்னும் பெண் கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலை தொடர்பாக சகோதரர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கசிப்புக் குதம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (51)

## இரத்த பேதிக்கு 12 பேர் பலி

(கொழும்பு)

இரத்தோட்டையில் இரத்த பேதி நோயினுல் பன்னிரெண்டு பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந் நோய் கிராமங்களிலும் பரவி வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சகலஉணவு விடுதிகளும் நேற்று முன் தினம் முதல் இப்பகுதிகளில் மூடப்பட்டுள்ளது. (ச)

### சர்வதேச

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குறிப்பாக 'வெரிதாஸ்' மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகளின் கானங்களையும் ஒலிபரப்பி வருகிறது. (சி)

## ஹெலி சூட்டு பாம்பு பலி

(யாழ்ப்பாணம்)

ஹெலியின் துப்பாக்கிச் சூட்டுக்கு மனிதர்கள் கால்நடைகள் மட்டுமல்ல பாம்பும் இரையாகியுள்ளது.

நேற்றுக்காலை 11 மணியளவில் நாவற்குழிப் பகுதியில் ஹெலி மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் பிரதான வீதியைக் கடக்கமுற்பட்ட புடையன் பாம்பு ஒன்று சிக்கி சின்னுபின்னமாகி இறந்து கிடக்கக் காணப்பட்டது.

ஊரடங்கு சட்டத்தை இப் பாம்பு மீறியதாலே இக்கதி நேர்ந்ததாக பொது மக்கள் வருத்தப்பட்டனர். (வி)

## தனியார் பாதுகாப்புச் சேவை

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலைக்கு(General Hospital, Jaffna) பாதுகாப்பு சேவை வழங்க சம்பந்தப்பட்ட திணைக்களத்திஞல் அங்கீகரிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன. குறைந்த பட்சம் 10 பாதுகாவலர்கள் நாளொன்றுக்குத் தேவைப்படுவதுடன் ஒருவர் எட்டு மணித்தியாலங்கள் கடமையாற்றுவதற்கு எவ்வளவு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதை இக்கம்பனியின் விபரங்களையும் தற்பொழுது வேறு எந்தெந்த நிறுவனங்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றனதென்பதனையும் குறிப்பிடவேண்டும். விண்ணப்பங்களை எங்களிடம் நேரில் எதிர்வரும் 26-11-90 பகல் 12 மணிக்கு முன்பதாக ஒப்படைக்கவும்.

டாக்டர் புஷ்பா சண்முகம்
பணிப்பாளர்
யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

(எ-885)